(4) அறிவிப்புகள்

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவையின் 192(1)-வது விதியின்கீழ், பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :

1. சட்டப் பேரவைத் தலைவர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.
3. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.
4. மாண்புமிகு உணவு-விவசாய அமைச்சர் அவர்கள்.
5. மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள்.
6. மாண்புமிகு மருத்துவ-அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள்.
7. திரு. அ. ப. அழகமுத்து.
8. திரு. பி. ஜி. கருத்திருமன்.
9. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
10. திரு. ஏ. பாலசுப்பிரமணியன்.
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
12. ஹாஜி ம. மு. பீர் முகமது.
13. திரு. க. ர. நல்லசிவன்.
14. திரு. ஆ. கு. சுப்பையா.
15. திரு. ம. பொ. சிவஞானம்.

அலுவல் ஆய்வுக் குழுவின் தலைவராகப் பேரவைத் தலைவர் இருப்பார்.

(5) கண்டனத் தீர்மானம்.

தஞ்சை மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு நிலைநிறுத்தத் தவறியதும் கீழ்வெண்மணி கிராமத்தில் [redacted] தீவைப்பால் பலர் உயிரிழந்ததும் குறித்த அமைச்சரவையின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. ஜயராஜ் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தின் மீதான விவாதம்.

இந்த நிகழ்ச்சி வழக்குமன்றத்தில் பல நிலைகளில் இடம் பெற்றிருக்கின்றது. ஆகவே, உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் விளக்கங்களை அளிக்காமல் பொதுவான நிலையில் பேச வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது திரு. ஜெயராஜ் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.